# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 115/2021

Deposition of Witness Lw13 examined as Pw11 Dt. 23.06.2026

| | |
|---|---|
| Name | செல்வம் |
| Father Name | பெருமாள்சாமி |
| Calling | காவல் ஆய்வாளர் ஓய்வு |
| Age | 62/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day23.06.26.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் மயிலாடுதுறை காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 10.08.2021 ஆம் தேதி மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 423/2021 பிரிவு 392 இதச வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இதற்கு முன்பு இவ்வழக்கினை விசாரணை செய்த ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் 28.04.2021 ஆம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுந்தரம்,நேசமணி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகவர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அ.த.சா.ஆ – 7,8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சிகள் செல்வி, கோவிந்தராஜ்,கோமதி, பத்மநாபன், அருண்குமார்,சுந்தரம்,நேசமணி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினம் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி மருது என்கிற விஜயபாஸ்கர் என்பவரை பொறையார் சிறைச்சாலையில் இருந்தவரை PT Warrant மூலம் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி இவ்வழக்கில் உட்படுத்தினேன். வழக்கில் சம்பந்தப்பட்ட தடையத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பபட்டது. முதல் விசாரணை செய்த சாட்சிகளையே நான் மீண்டும் விசாரணை செய்தேன். ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பெறவில்லை. 15.08.2021 தேதி சாட்சிகள் ராமகிருஷ்ணன்,சேதுபதி, உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே வழக்கின் விசாரணை அனைத்தும் முடித்தும் எதிரி மீது பிரிவு 392 இதச வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குற்ற சம்பவம் 28.04.2021 ஆம் தேதி என்றால் சரிதான். எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்றால் 28.04.2021 ஆம் தேதி 13.00 மணிக்கு ஆகும். அன்றைய தினமே வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். புகாரில் சம்பவம் நடந்த நேரம் 28.04.2021 ஆம் தேதி அதிகாலை 1.00 மணி என்றால் சரிதான். புகார்தாரர் மட்டும் நேரில் ஆஜராகி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சி யாரேனும் புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் மாமனார் கோவிந்தராஜ், மாமியார் கோமதி ஆகியோர் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள். வேறு யாரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அன்றைய தினமே அனுப்பியுள்ளோம். எந்த காவல் அதிகாரியின் மூலம் அனுப்பட்டது என்று தெரிந்துகொள்ளவில்லை. காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடைப்பட்ட தூரம் அரை கிலோ மீட்டர் ஆகும். எட்டு

நாட்கள் காலதாமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான். செயின் பறித்த போது குழந்தையின் கழுத்தில் காயம் ஏற்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதா என்றால் குழந்தைக்கு காயம் ஏதும் இல்லை. புகார்தாரரை கழுத்தை நெறித்ததாக புகாரில் கூறப்பட்டுள்ளது அது குறித்தும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதா என்றால் புகார்தாரருக்கு காயம் ஏற்படவில்லை. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் அ.சா, 1 காவல் நிலையத்தில் ஆஜராகி சான்றுப் பொருள்கள் கொடுக்கவில்லை என்றால் புகார் கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சான்றுபொருட்களை கைப்பற்றப்படவில்லை என்றாலும் புள்ளிவிவரக் கணக்கிற்காக இந்த வழக்கு பதிவு செய்யபட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அடிப்படையில் மேற்படி எதிரியின் மீது குண்டாஸ் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குண்டாஸ் வழக்கு போடுவதற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் பொய்யாக புகாரைப் பெற்று வழக்குப் பதிவு செய்து பொய்யான குற்ற அறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சொன்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி
பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு சரியானதென்று
ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.